531

போதனை விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்

15 JUN 1946
531

Editor & Publi... Lourduswami, B.A., L.T.
R... ...ning School, Trichinopoly.

...ல்-மே 1946 மலர் 10, 11

...முறை பாடசாலை, திருச்சினப்பள்ளி.

வருஷ சந்தா ரூபாய் 1. தனிப்பிரதி அணு 2.

JL
ஊ211, N11;PD
N46 . 36 . 10/11
2/0010.

போதனு விஷயப் பூங்கொத்து

கொத்து 36] ஏப்ரல்-மே 1946 [மலர் 10, 11

பத்திராதிபர் குறிப்புகள்

பழைய மாணவர் தினக்கொண்டாட்டம்:—சென்ற மாதம் 23-ம் தேதி மாலையில் ஷை கொண்டாட்டம் திருச்சி டெப்யூடி கலெக்டர் ஸ்ரீ P. A. Antony M.A. அவர்களது தலைமையின்கீழ் வெகு சிறப்பாய் நடந்தேறியது. (விவரம் மற்றோரிடத்திற் காண்க.) அவ்வமயம், வந்து குழுமி தாய் பாடசாலையின்பேரில் தமக்குள்ள அன்பையும், அபிமானத்தையும் தெரிவித்துக்கொண்ட நம் பழைய மாணவர்களனைவர்க்கும் நன்றி கூறுகிறோம்.

* * * *

New Admissions.—வழக்கம்போல் அடுத்த ஜூலை மாதம், நம் போதனுமுறைப் பாடசாலையில், ஸெக்கண்டரி கிரேடிலும், எலிமெண்டரி கிரேடிலும் சேர்ந்து படிக்க புது மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். சேர விரும்புகிறவர்கள் இதனடியில் வரும் ஒழுங்குகளைக் கவனிக்கக்கடவர்:—

1. அபேட்சகர்கள், இப்பாடசாலை Application Form வாங்கி, அதில் பூர்த்திசெய்து, அதை இப்பாடசாலைத் தலைமை ஆசிரியருக்கு, அடுத்த மே-மீ 31-ம் தேதிக்குள் அனுப்பிவிடவேண்டும். Form ஒன்றுக்கு 2 அணு வீதம் தபால் ஸ்டாம்பு அனுப்பி, தேவையான பாரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

2. அபேட்சகர்கள் அடுத்த ஜூலை-மீ 1-ம் தேதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இப்பாடசாலைத் தலைமை ஆசிரியருக்குமுன் ஆஜராகவேண்டும். ஆஜரானவர்கள் ப்ரவேச பரீட்சை எழுத பிரவேசக் கட்டணம் ரூ. 2 செலுத்திப் பரீட்சை எழுதவேண்டும். அதில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான் பாடசாலையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

[குறிப்பு] ஷை பரீட்சைக்கட்டணம் ரூ. 2-ல் பரீட்சை நாளன்று சாப்பாடு, இடவசதி, வினு விடைப்பத்திரங்களுக்கேற்படும் செலவு முதலிய சகல செலவுகளும் அடங்கும்.

3. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொருவரும் சேர்க்கை தினத்தன்று ரூ. 10 "டிபாசிட்" பணம் (Deposit) கட்டவேண்டும்.

4. ஷை "டிபாசிட்" கட்டுவதுடன், இப்பாடசாலை "போர்டிங்கில்" (Boarding) சேர்ந்து படிக்க, "போர்டிங் அட்வான்ஸ்" ரூ. 20 கட்டிச் சேரவேண்டியது அவசியமாகும்.

Emergency Training Course for Secondary Grade Teachers. செக்கண்டரிகிரேடு ஆசிரியர்களுக்கென அவசர (ஒருவருஷ) போதனா பயிற்சி.

(Pros. R. C. 33. S. O./45 dated 22—3—1946 of the Director of Public Instruction, Madras).

மேற்படி போதனா பயிற்சி 1-4-1946-லிருந்து ஒருவருஷத்திற் நடக்குமென்ற திட்டம், தக்க எண்ணிக்கையுள்ள மாணவர்கள் இல்லாதபடியால் ரத்து செய்யப்பட்டது. ஆனால், இந்த அவசர போதனா பயிற்சியை 1-7-1946-லிருந்து துவக்கும்படி சர்க்காருக்கு விண்ணப்பம் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த ஒருவருஷ போதனா பயிற்சிக்கு அருகதையுள்ளவர்கள் குறைந்த பக்ஷம் S.S.L.C. பாஸ் (Eligible) செய்தவர்கள் தான் என்று அறியவும்.

சென்னை கல்வி இலாகா

G. O. No. 506, Education, 15th, March 1946) ஷை உத்தரவின்படி, **17** வயதுக்குக் குறைந்த போதனாமுறைப் பயிலாத ஆரம்பப்பாடசாலை ஆசிரியர்கட்கும், **60** வயதுக்கு மேற்பட்டவர்கள் போதனாமுறைப் பயின்று இருந்தாலும் அல்லது பயிலாமல் இருந்தாலும் அத்தகைய ஆரம்பப்பாடசாலை ஆசிரியர்கட்கும் "கிராண்டு" (Grant) வழங்கப்படமாட்டாது.

WANTED 3 Secondary Grade Trained Lady Teachers for St. Philomena's H. E. School at Tindivanam. Salary, on start, Rs. 35/- per mensem plus dearness allowance.

Apply to the Mother Superior of the above School.

WANTED a Secondary Grade Trained Teacher for Sree Sivakami Vidyasala, Manakkal, Lalgudi P. O. Full grant and Dearness Allowance plus an incremental scale of Rs. 7/1/12, plus Rs. 3/ p. m. house rent allowance if residing in the village. Probation 6 months. Applications stating age, caste, etc., should reach the correspondent before 30th April 1946.

WANTED immediately 2 Secondary Grade Trained Teachers and 4 Higher Grade Trained Teachers on a salary of Rs. 35/- (thirty five only) and Rs. 20/- (Twenty only) respectively with the Dearness Allowance of Rs. 16/- (sixteen only.) Deserving persons will be started on an increased scale of pay. Posts likely to be permanent.

Apply to the Manager, St. Mary's Higher Ely. School, Kolappalur, P. O., (*Via*) Erode and Gobi.

திருச்சினாப்பள்ளி

ஆர். ஸி. போதனாமுறை பாடசாலை பழையமாணவர் சங்கத்தின்

வருடாந்தரக் கொண்டாட்டம்

21040

23—3—1946

திருச்சினாப்பள்ளி, ஆர். ஸி. செக்கண்டரி போதனாமுறை பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தர விழா சென்ற மார்ச்சு-மீ 3-ம் உ சனிக்கிழமை மாலை, திருச்சி டெப்டி கலெக்டர் ஸ்ரீ பி. ஏ. அந்தோனி, எம். ஏ., அவர்கள் தலைமையின்கீழ் மேற்படி பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

கடவுள் வணக்கத்துடன் விழா தொடங்கலாயிற்று. மேற்படி பாடசாலை தலைமையாசிரியர் சங்கைக்குரிய ஏ. லூர்துசாமி, பி. ஏ., எல்.டி. அவர்கள் அனைவர்க்கும் நல்வரவு கூறினவுடன். சிற்றுண்டி வழங்கப்பட்டது. அவ்வமயம் தாய்ப்பாடசாலையின்பேரில் தங்களுக்குள்ள அன்பையும் அபிமானத்தையும் வெளிப்படுத்த பல புகழுரைகள் பழைய மாணவர்களால் கூறப்பட்டன. பின்னர் சங்கீதப்போட்டி நடைபெறலாயிற்று. மேற்படி சங்கத்தின் காரியதரிசி, ஸ்ரீ ஏ. தாமஸ் அவர்களால் வருடாந்தர ரிப்போர்ட் வாசிக்கப்பட்டது.

இறுதியில் தலைவர் பலத்த கரகோஷத்துடன் எழுந்து, வெள்ளிப்பதக்கங்கள், நற்சாட்சிப் பத்திரங்கள் முதலிய பரிசுகளைத் தகுதியுடையோருக்கு வழங்கினர்.

தலைவர் தமது இனிய சொற்பொழிவில், கிராமங்களுக்கு வெளியேறும் ஆசிரியர்கள் உபாத்திமைத் தொழிலின் உயரிய லக்ஷணங்களைக் கடைபிடித்து ஒழுகுமாறும் விசேஷமாய், கிராம சமூக முன்னேற்றத்தின்பொருட்டு வெகுவாய் உழைக்கவேண்டுமென்றும், பொது உடைமை போன்ற கடவுளை நிராகரிக்கும் இயக்கங்களில் ஆசிரியர்கள் தலையிடாமல் நமது தேச மக்களிடையே வேரூன்றி இருக்கும் தெய்வ பக்தியை வளர்க்கத் தம்மால் இயன்றளவு உதவி செய்வது கடமையாகும் என்றும் கூறி முடித்தனர்.

பின்னர் தலைவர் அவர்களுக்கும், கூட்டத்தினருக்கும் வந்தனம் கூற கூட்டம் இனிது முடிந்தது. ஷை விழாவன்று, ஷை சங்கத்தின் பொக்கிஷதாரரும் ஸ்தல காரியதரிசியுமாகிய ஆசிரியர் ஸ்ரீ Y. சூசைமாணிக்கம் அவர்கள் புரிந்த உபந்நியாசத்தின் சாராம்சம் பின்வருமாறு:—

"பழைய மாணவர் சங்கத்தின், ஸ்தல காரியதரிசி, பொக்கிஷதார் என்ற உரிமையில் மாத்திரமின்றி நான் இப்போதனாமுறைப்

பள்ளியில் படித்த பழைய மாணவ ஆசிரியன் என்ற முறைமையிலும் நான் இப்பொழுது உங்களுக்குமுன் சில வார்த்தைகள் கூற முன்வந்திருக்கிறேன்.

ஆங்கிலேயர்கள் சிறிய உத்தியோகங்களைக் கைக்கொண்டே படிப்படியாகப் பெரிய உத்தியோகங்களை அடைந்துவருகிறார்கள் என்பதை உணரவேண்டும். நீங்கள் இரண்டு ஆண்டுகளில் உங்கள் படிப்பை முடித்துவிட்டதாக எண்ணுகிறீர்கள். அது தவறான எண்ணம். இனிமேல்தான், உங்களது போதனாமுறையை வளர்க்கவேண்டிய காலம் என்பதை ஒவ்வொரு ஆசிரியரும் மனதில் பதியவைத்துக்கொள்ள வேண்டும். இனிமேல்தான் உங்கள் போதனாமுறைகளையும், உங்கள் நடத்தையையும், கல்வியையும் வளர்க்கவேண்டிய காலமாகும். 'கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு' என்பது இங்கு நோக்கத்தக்கதாகும். நீங்கள் பிள்ளைகளுக்கு ஆசிரியர்களாக இருக்கவேண்டுமேயொழிய, உங்களைப்பொருத்தமட்டில், மாணவர்களாகவே எண்ணி கல்வியறிவை விருத்திசெய்துகொள்ளல் வேண்டும். உங்கள் நன்னடத்தையாலும், போதனையினாலும், உங்கள்பால் ஒப்பிக்கப் போகும் பாலர்கள் பிற்கால வாழ்விற்குச் சிறந்த தேச மக்களாக ஆகும்படி செய்வதே உங்கள் கடமையாகும். ஒரு தேசம் முன்னேறுவதும் சீர்கெடுவதும் ஆரம்ப ஆசிரியர்களாலே என்பதை மறக்கலாகாது. கல்வி பயில வரும் பாலர்களைப் பிற்கால தேச நன்மக்களாக, வரப்போகும் பெரியோர்கள் என்று நாம் கருதவேண்டும். தெய்வ பக்தி, ராஜபக்தி இவைகளை அவர்களது மனதில் புகச்செய்யவேண்டும். நம் நன்னடத்தையையே அவர்கள் சிறந்த அணிகலமாகக் கொள்ளவேண்டும். மாணவர்கள் விருப்பத்துடன் பாடங்களைப் படித்து நல்ல மாணாக்கர்களாக வளரவேண்டும்.

உபாத்திமார் சம்பளம் மிகச் சொற்பம். மற்ற இலாக்காக்களில் கிடைக்கும் சம்பளம் மாதிரி உபாத்தியாயர் தொழிலில் வரும்படி கிடைக்காது. அப்படி இருந்து தேவையைப் பெற்று சுவாதீனத்தை நாம் அநுபவிக்க முடியாது. ஆனால் பள்ளிக்கூடத்து நேரம் தவிர மற்ற நேரங்களில் நாம் மற்ற துறைகளில் உழைத்துப் பொருள் சம்பாதிக்கவேண்டும். கோகலே என்பவர் தான் பள்ளிக்கூடத்து நேரத்தைத்தவிர மற்ற சமயங்களில் பத்திரிகைக்குக் கட்டுரைகள் எழுதுவார். பிரசங்கங்கள் செய்வார். விவசாய வேலை, புத்தகங்களை எழுதுதல், ஆடுமாடு கோழி முதலியவைகளை வளர்த்தல் முதலிய தொழில்களைச் செய்யலாம். வியாபாரம் செய்யும் விஷயத்தில் பங்காளிகளாக இருக்கலாம். நமக்குக் கொஞ்சம் சம்பளம் கிடைத்தாலும் கடவுள் நம்மை க்ஷேமமாக நடத்துவார் என்று நம்பிக்கை கொள்ளவேண்டும். 1805-ம் வருடம் அக்டோபர் மாதம் 21-ம் தேதி டிரபல்கார் யுத்தம் ஆங்கிலேயருக்கும் நெப்போலியனுக்கும் நடந்த

போரில் ஆங்கிலேயர்கள் வெற்றிபெற்றார்கள். அந்தச் சண்டையை நடத்திய நெல்சன் பிரபு காயப்பட்டார். அவர் சாகும்போது சொல்லிய கடைசி வார்த்தைகள் "England expects every man to do his duty." உபாத்திமார்களாகிய நாம் நம்முடைய கடமையைச் சரியாகச் செய்தால் நாம் பயின்ற இந்தப் பாடசாலைக்கு நல்ல பெயர் கொண்டுவருவோம். நம்முடைய தேசத்திற்குத் தொண்டு செய்தவர்களாக இருப்போம். நம்முடைய வேலையில் நாம் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையே ஏற்படவேண்டும். இங்கிலாந்து தேசத்தில் பழையகாலத்தில் கால் இல்லாதவர்கள், கை இல்லாதவர்கள், வேறு எந்த வேலைக்கும் தகுதி இல்லாதவர்கள் ஆசிரியர் தொழிலைக் கைக்கொள்வார்களாம். ஆனால் தற்காலத்தில் குணசாலிகள், திறமையுள்ளவர்கள் படித்து அறிந்தவர்கள் ஆகிய இப்படிப்பட்டவர்கள் ஆசிரியர் தொழிலை மேற்கொள்கிறார்கள். அவர்களுக்குப் பயிற்சியும் கொடுக்கிறார்கள். ஆசிரியத்தொழில் மாசில்லாத்தொழில் என்று திலகர் சொல்லுகிறார். ஆசிரியர்களாகிய நீங்கள் உங்கள் வாழ்நாளில் ஒரு வியாபாரியைப்போல் இருக்கவேண்டும். எப்படியெனில் ஒரு வியாபாரி சரக்குகளைச் சேகரித்து வைத்துக்கொண்டு காலாகாலத்தில் விற்று நல்ல லாபம் அடைவதைப்போலவே நீங்களும் போதனா முறைகளைத் தேடி மாணாக்கர்களுக்கு நன்கு கற்பித்து நல்ல ஆசிரியர் என்று பெயர் எடுக்கவேணும்.

"பேடன்" பிரபு சொல்லுவதுபோல நாம் எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கவேண்டும். நான் உங்களுக்கு என் வாழ்த்துதலை அளித்து எல்லாக் காரியங்களும் உங்களுக்குச் சித்தி ஆகும்படி கடவுளைப் பார்த்து மன்றாடுகிறேன். திரும்பவும் நாம் அடுத்த வருஷம் இவ்விடத்தில் ஒருவரையொருவர் சந்திக்கும்படி கடவுள் கிருபைசெய்வாராக."

இது என்ன?

1. போட்டதைக் கழற்ற முடியவில்லை.
   M. Thomas P. Pandian; Sattur.
2. ஆடு மேயுது; தோல் காயுது; கறி அவியுது.
   Xavier Jeganathan; Sattur.
3. இரண்டு குழிகள் தோண்டி: ஒருகால் நாட்டி.
   K. Krishnan.
4. அணில் ஏறாத மரம்; தச்சன் சீவாதமரம்.
   G. S. William Duraisamy.

பாடக்குறிப்பு

[S. Maria Alangaram]

பாடம்: விஞ்ஞானம் **வகுப்பு: V-வது வகுப்பு**

நோக்கம்: காற்றும் சுவாசித்தலும் என்பதைப்பற்றி விவரித்தல்.

பீடிகை: நாம் உயிருடன் வாழ்வதற்கு அத்தியாவசியமானவை கள் எவை? ஏன் தண்ணீரையும், ஆகாரத்தையும்விட காற்று அத்தியாவசியமானது? காற்றை நாம் என்ன செய்கிறோம்? அதை நாம் எவ்வாறு சுவாசிக்கவேண்டும்? எப்பேர்ப்பட்ட காற்றை சுவாசிக்க வேண்டுமென்று பார்ப்போம்.

உபகரணம்: சுவாச உறுப்புகளின் அச்சுப்படம்.

வியாக்கியானம்: நாம் எந்தெந்த அவயவங்களினால் சுவாசிக்கின்றோம்? (மூக்கு, வாய்) ஆனால் நாம் எந்த அவயவத்தினால்தான் சுவாசிக்கவேண்டும்? கடவுள் நாம் சுவாசிப்பதற்கென்றே தனியாக அமைத்த உறுப்பு. ஆகவே அவர் நாம் சுவாசிக்கும்போது சாதாரணமாக ஏற்படக்கூடிய கெடுதல்களை நிவர்த்தி செய்து வைத்திருப்பார். நம்மைச் சுற்றியுள்ள காற்றில் என்ன அடர்ந்திருக்கிறது? (தூசி) தூசியானது சாதாரணமாக நமது கண்ணிற்குத்தென்படாது. சூரிய வெளிச்சம் அறைக்குள் ஜன்னல் வழியாக வரும்போது நாம் என்ன காண்கிறோம்? (தூசிகள் பறப்பதை) இதிலிருந்து நம்மைச்சுற்றி தூசி பறந்துகொண்டேயிருக்கிறது. பீச்சும் பம்பைத் தண்ணீரினுள் வைத்து தண்டை மேலாக இழுத்தால் என்ன நடக்கிறது? (தண்ணீர் உறிஞ்சப்படுகிறது). அதுபோலவே மூக்கின் வழியாக காற்றை வேகமாக உள்ளே இழுக்கும்போது காற்றிலுள்ள தூசிகளும் உள்ளே செல்லுகிறது. இவ்வாறு தூசிகள் சென்று புப்புசத்திற்குச் சென்றால் என்ன நேரும்? பெரிய வியாதியை உண்டுபண்ணும். ஆகவே நமது நாசிகளில் மயிர்கள் முளைத்தெழுந்து சல்லடையாக உதவுகிறது. நாம் தண்ணீரிலுள்ள அசுத்தத்தை நீக்கவேண்டுமாயின் எவ்வாறு சல்லடையை உபயோகிக்கிறோமோ அதுபோலவே நாசியிலுள்ள மயிர்கள் நமக்கு கடவுளால் அளிக்கப்பட்ட இயற்கைச் சல்லடை. அப்படியே தூசிகள் உள்ளே சென்றாலும் தும்மல் வழியாக வெளி வந்துவிடும். ஆனால் வாய் வழியாக நாம் சுவாசிப்போமானால் இந்த விதமான சல்லடைகள் இல்லை. தூசிகள் உள்ளே செல்லும். நமக்கு வியாதியை உண்டுபண்ணும்.

செல்லும் வழிகள்: மூக்கின் துவாரத்தின் வழியாகச்சென்று பின் காற்றுக்குழாயின் வழியாகச்சென்று நுரையீரலுக்கு (புப்புசத்திற்கு) இரு பிரிவாகச் செல்லுகிறது என்பதை சுவாச உறுப்புகள் என்ற அச்சுப்படத்தைக்கொண்டு அதன் வழியை மாணவனுக்கு நன்கு காட்டிப் பின் அவர்களில் சிலரைக் காற்று செல்லும் வழியை ஒன்றன்பின் ஒன்றாக படத்தின்மூலம் பெயர் சொல்லச் சொல்லுதல்.

நுரையீரலும் அதன் வேலையும்: நுரையீரல் வலது நுரையீரல் இடது நுரையீரல் என்ற இரு பிரிவினை உடையது என்பதை படத்தில் காட்டுதல். நுரையீரல் வலது பக்கம் இரண்டு மடிப்பாயும் இடது பக்கம் மூன்று மடிப்பாயும் இருக்கிறது என்று படத்தில் ஒவ்வொரு பக்கத்திலுள்ள மடிப்பையும் எடுத்துக்காட்டி அவர்களையே எண்ணச்செய்யவேண்டும். இந்த நுரையீரல்களில் அநேக சிறு சிறு அறைகள் உண்டு. அவற்றிற்குச் சிறுசிறு இரத்தக்குழாய்கள் வந்து முடியும். இந்த இரத்தக்குழாயில் என்ன இருக்கிறது? இந்த இரத்தம் அங்கு வந்துள்ள காற்றில் பிராண வாயுவைமட்டும் எடுத்துக் கொள்ளுகிறது. ஒரு மேஜையின்மேல் வாள், துப்பாக்கி, மிட்டாய் வைத்திருந்தால் நீ எதை எடுப்பாய்? உனக்கு வேண்டிய மிட்டாயை யல்லவா. அதுபோல அவ்விரத்தமும் தனக்குவேண்டிய பிராண வாயுவைமட்டும் எடுத்துக்கொள்கிறது. ஏன் அது பிராண வாயுவை எடுத்துக்கொள்கிறது தெரியுமா? நீ சுத்தமாக இருக்கவேண்டுமானால் என்ன செய்கிறாய்? குளிக்கிறாய். அதுபோல இந்த இரத்தம் தன்னை சுத்திகரித்துக்கொள்வதற்குப் பிராணவாயுவை எடுத்துக்கொள்கிறது. பின் மீதியுள்ள காற்றை நாம் என்ன காற்று என்கிறோம்? அந்தக் கரியமலவாயுவு பின் வெளி வருகிறது.

அப்பியாசம்: நாம் ஏன் மூக்கினால்மட்டும் சுவாசிக்கவேண்டும்? ஏன் வாயினால் சுவாசிக்கக்கூடாது? நாம் சுவாசிக்கும் காற்றில் எச்தெந்த வாயுவுகள் உண்டு. இரத்தம் எந்த வாயுவால் எங்கே சுத்திகரிக்கப்படுகிறது?

பின் மாணவர்களை சுவாச உருப்புகளின் படங்களை வரையச் செய்தல்.

WANTED 2 Secondary Grade Trained Teachers and 4 Higer grade Trained Teachers. Salary more than the grant plus Government Dearness Allowance of Rs. 16/-. Increment will be given to efficient Teachers.

Apply the Manager, Thiruvenkata Vilas,
Aided Ely. School, Rasipuram, Salem Dt.

WANTED a Secondary Grade Trained Teacher to be Headmaster in the Lower Grade Ely. School, Jalarpet, Salary Rs. 30/- plus Dearness Allowance granted by the Government.

Apply to the Manager, R. C. School, Jalarpet.

பிரியா நட்பு

[K. Nathamuni, T. P.]

(கொத்து 36, மலர் 9, பக்கம் 161-ன் தொடர்ச்சி)

கலைக்கே ஓர் பொக்கிஷமாய் விளங்குவது அக்குன்று. கலாவாணியின் உறைவிடம். சிற்ப அரசி செங்கோலோச்ச சிற்பி அமைத்த சிங்கார மண்டபம். வேட்டைக்கெழுந்த சிங்கக்கூட்டம் வேழக் கூட்டத்தை எதிர்ப்பட்டாற்போல் சிற்பங்களை நாசம் செய்ய எழுந்த அவன்முன் தோன்றிற்று அக்குன்று. உடனே படையை நிறுத்தினான். அண்டமெல்லாம் பிளக்கவல்ல ஆடவல்லான் என்ற பீரங்கியும் முன்னே வைக்கப்பட்டது. அருகே சேனை காவலன் நின்றுகொண்டிருந்தான். பின்னே எண்ணற்ற வீரர்கள் நின்றனர். அவர்களுக்குப்பின்னே குதிரைமீது வீற்றிருந்தான், கோரமும் சோகமும் உருவெடுத்தனைய வேந்தன் விக்கிரமன். பீரங்கி குறிபார்த்து வைக்கப்பட்டது.

அதோ அம்மலையிலிருந்து இவ்வளவு வேகமாக வருகின்றானே அவன் யாராயிருக்கலாம்? அந்த வேகத்தில் ஒரு சிறு கல் தடுக்கினாலும் தன்னுயிர் மாய்வது நிச்சயமென்பதறிந்தும் அவன் அவ்வாறு ஓடிவரக் காரணம் யாது? அவ்வழகிய சிற்பங்களை சிருஷ்டிசெய்த சிற்பியே அவன். ஓடிவருவதும் உயிர் பிழைக்கவல்ல. பீரங்கியின் வாயில் வீழ்ந்து உயிர்விடவேயாகும். அதோ அவனும் வந்துவிட்டான்.

பீரங்கியிலோ குறி சரியா என அறிய சோதனைக்குண்டு கெடிக்கப்பட்டாய்விட்டது. அதுசமயம் அவனும் அதன் வாயில் வந்து நின்றான். 'ஐயோ! நீயும் சுடப்படுவாய் பிழைத்துப்போய்விடு' என்றான் சேனாதிபதி. 'இல்லை, அல்லும் பகலும் அரும் பாடுபட்டுச் செய்த அவை அழிவதை என் கண்கள் காணச் சகியா என்னைக் கொன்றுவிட்டு அவற்றை அழியுங்கள்' என்றான் அவனும்.

அதுபோது "சுட்டு வீழ்த்துங்கள்" எனப் பின்னே நின்ற மன்னவன் ஆணை பேரிடி என முழங்கிற்று. பீரங்கியும் அதற்கு எதிரொலி தந்தது. சிற்பியின் உடலைச் செங்குன்றிற்கே தூக்கிச் சென்றது குண்டு. ஆனால் அதன் குறியோ பிழைத்தது.

பின்நின்ற மன்னவன் விரைந்துவந்தான். 'சேனாதிபதி என்றைக்கும் இல்லாமல் இன்றைக்கு நம் குறி தவறியதன் காரணம் தெரியவில்லை வா! மேலே சென்று பார்த்துவிட்டு வந்து இதைத் தகர்த்துத் தள்ளுவோம்.' இருவரும் மலைமீதேறி மண்டபத்தினுள்ளே நுழைந்தனர். என்ன விந்தை! எந்தச் சிலை காரணமாக அவன் சிந்தை நொந்து சிறப்பிழந்து நிற்கின்றானோ அதே சிலையைத்தான் அங்கு கண்டான்! 'சேனாதிபதி என்ன? இது என் மனைவியின் சிலை

யன்றே? இவ்வளவழகாகச் செதுக்க வல்லவன் மதனனை அல்லாது வேறு யாராயிருக்கும்? இச்சிலையை இங்கே செதுக்கக் காரணம்தான் யாது? எதாயிருந்தால்தான் என்ன? உலகம் போற்றும் ஒப்பற்ற கலைஞனை, எனது வாழ்வின் வழிகாட்டியாகிய ஆருயிர்த் தோழனை, சிற்பக்கலையின் சேமநிதியைக் கொல்லக் காரணமான இச்சிலை ஒழியட்டும் எனத் தன் காலால் உதைத்துத் தள்ளினான். சிலையும் சின்னாபின்னமாயிற்று. திரும்பி இரண்டடி எடுத்துவைத்தான். எதிரே நோக்கினான். அவன் கண்களையே அவன் நம்புவதற்கில்லை. தன் அருமைத் தோழன் தோள்களிலே தன் கரங்கள் தழுவியவண்ணம் இருவரும் நிற்பதைக் கண்டான். அச்சிலைகட்கு உயிரில்லா ஓர் குறைதான். உடலை உள்ளபடி படைத்துவிட்டான் சிற்பி. உயிரளிப்பது மட்டும் அவனால் முடியவில்லை. 'சேனாதிபதி என்ன இது? மதனனே இவற்றைச் செய்திருக்கவேண்டும். நீ அவனை கொல்லவில்லையா?

"இல்லை அரசே! அவர் கொன்றுவிடும்படிதான் வேண்டினார், ஆனால் தங்களது அழகிய கரங்சள் தவழ்ந்து விளையாடிய அக் கழுத்தைத் துண்டிக்க என் கைகள் மறுத்துவிட்டன." 'அப்படியானால் நண்பா! நீ இறக்கவில்லையா? நீ எங்கிருந்தாலும் கண்டுபிடித்தே தீர்வேன் என ஆவேசங்கொண்டவன்போல் அடுத்த வாயிலின் வழியே வெளியே வந்தான். அடங்கா மகிழ்ச்சி ஆராத்துயருக்கு அறிகுறி என்பதை மறந்தான்.

வாயிலின் படியிலே துண்டிக்கப்பட்டதோர் கரத்தைக் கண்டான். எடுத்தான். அச்செந்தாமரைக் கரத்திலே பச்சை எழுத்திலே மதனன் என்று எழுதியிருக்கக் கண்டான். உடன் வந்த சேனாதிபதியும் மதனன் பீரங்கி வாயை விட்டு அகல மறுத்ததையும் அதே சமயத்தில் மன்னன், சுட்டு வீழ்த்துங்கள் எனக் கட்டளை இட்டதையும் சேனாதிபதி எடுத்துரைத்தான்.

'ஐயோ! இங்கும் நானே உனக்கு எமனானேனே!' என மன்னன் ஏங்கினான். அவன் தலை சுழன்றது. கால்கள் அவனைத் தாங்க மறுத்தன. தவறி விழுந்தான். செங்குத்தான செங்குன்றின் ஒவ்வொரு பாறைக்கும் குருதிச் சாயம் பூசிக்கொண்டே அவனது உடல் புறண்டுகொண்டுபோய் ஓர் பள்ளத்தாக்கில் தேங்கியது. அங்கேதான் தன் அருமைத் தோழனைக் கண்டான். அத்தலையை எடுத்து ஓர் முத்தம் கொடுத்தான். அத்துடன் உயிரையும் கொடுத்தான்.

சேனாதிபதி மன்னன் மதனனுக்காகக் கட்டிய ஆலயத்திலே மலையில் இருந்த இருவர் சிலையையும் வைத்து விழாவெடுத்தான்.

இணைபிரியாக் கலைவேந்தனும் நிலவேந்தனும் இன்பவுலகில் இனிது வாழ்ந்தனர்.

கிராமவாசிகளின் ஏற்றப்பாட்டு

[ம. குழந்தைசாமி]

(கொத்து 36, மலர் 9, பக்கம் 163-ன் தொடர்ச்சி.)

6-ம் பதியம்

கிராம மக்கள் அநேகவிதமாக ஏற்றப்பாடல்களைப் பாடுவார்கள். ஆரம்ப ஆசிரியர்கள் பூங்கொத்தில் வெளியாகும் ஏற்றப்பாடலை கிராம வாசிகளுக்குக் கற்பித்தால் அவர்கள் பிரியத்தோடும் ஆர்வத்தோடும் கற்றுக்கொள்வார்கள். கிராமவாசிகளின் ஒத்துழைப்பைப் பெற இது ஓர் கருவி எனலாம்.

(இவ்வாறும் பதியத்தில்) விவசாயி ஒருவன் கடவுளை வேண்டிக் கொண்டபடி மழை பெய்ததைப் பார்த்து சந்தோஷமுறுகிறான்.)

ஐம்பதியாஒன்று, ஐம்பதியாஇரண்டு,
ஐம்பதியாமூன்று, ஐம்பதியாநான்கு,
ஐம்பதியாஐந்து, ஐம்பதியாஆறு,
ஐம்பதியாஏழு, ஐம்பதியாஎட்டு,
அலையுதையா மேகம், ஆகாயமெல்லாம்,
அரபிக்கடல் தண்ணீர், அள்ளிவந்து பெய்ய,
நீலக்கடல் தண்ணீர், நீரைக்கொண்டு பெய்ய,
கருங்கடலின் தண்ணீர், கனத்தமழை பெய்ய,
ஒலிஒலித்து ஒளிவீசி, ஒழுகுதையா மேகம்,
வருமையுள்ள மக்களுக்கு, வந்ததையா மழையும்.

7-ம் பதியம்

(இவ்வேழாம் பதியத்தில் தன் மனைவி சமையல் செய்வதில் வல்லவள் என்பதை வெளிப்படையாக எடுத்துக்கூறி சந்தோஷமடைந்து சாப்பிடுகிறான்.)

அறுபதியாஒன்று, அறுபதியாஇரண்டு,
அறுபதியாமூன்று, அறுபதியாநான்கு,
அறுபதியாஐந்து, அறுபதியாஆறு,
அறுபதியாஏழு, அறுபதியாஎட்டு,
ஆலம் சருகரிச்சி, ஆக்கினாளே சாதங்கரி,
ஆக்கி வெளியேவந்தாள், அவள் உடம்பு நீர்வடியும்,
புங்கன் சருகரிச்சி, பொங்கினாளே சாதங்கரி,
பொங்கி வெளியேவந்தாள், அவள் பொன் உடம்பு நீர்வடியும்,
(அவள்) பருமாறும் சாதங்கரி, பலபேரும் புசிக்கலாமே,
என் மனைவி ஆக்குங்கரி, எல்லோரும் புசிக்கலாமே.

(தொடரும்.)

குழந்தையின் நன்றி

[Miss A. Mary Bella Goodwin]

("செந்தமிழ் நாடென்னும் போதினிலே" என்னும் மெட்டு.)

"அம்மம்மா!" என்றிடும் போதினிலே—இன்ப
அமுது பாயுது காதினிலே.
அம்மா பேசும் இன்ப பேச்சினிலே—ஒரு
அன்பு பெருகுது மூச்சினிலே.

(2)

பத்து மாதம் என்னை பத்திரமாகவே,
பாங்குடன் ஒருசிறு வீட்டினிலே;
வைத்து வளர்த்துப்பின் "வாழ்க!" என்றே—என்னை
வைத்துவிட்டாய் இந்த நாட்டினிலே.

(3)

ஆவலாய் என்னை ஓர் தொட்டியிலே—இட்டு
அன்புடன் மெல்ல நல் தாலாட்டி
காவலாய் இருந்து கஷ்டப்பட்ட—தாய்க்கு
கஷ்டம் கொடுப்பேனோ வாலாட்டி?

(4)

அன்பு பெருக நீர் அரவணைக்கையில்,
அகிலம் தோன்றுது ஆனந்தமாய்!
இன்பமுடன் *"மேரி" என் கையிலே—எனக்
இன்பம்வரும் பரமானந்தமாய்.

(5)

சுத்தமாய் என்தனை நித்தங்குளிப்பாட்டி,
சுகத்துடன் காத்த தாயுன்னையே;
இத்தரை மீதினில் "இறைவன்" என்பேனே
இன்பமாய் காத்தருள் நீயென்னையே.

குறிப்பு:—

*"மேரி" என்பது இவ்விடத்தில் தாய் தன் மகள் மேரியை அழைப்பதைக் குறிக்கிறது. ஆசிரியர்கள் தங்கள் பள்ளிப்பிள்ளைகள் பெயரை அவ்விடம் வைத்துப் பாடலாம்.

பெற்றோர் சங்கங்கள்

சென்ற 16-3-'46 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இப்பாடசாலையின் 21-வது ஆண்டுவிழாவும், பெற்றோர்சங்க நான்காவது ஆண்டு நிறைவுவிழாவும், புதிதாக அமைக்கப்பட்ட இப்பாடசாலைக் கட்டிடத்தில் கொண்டாடப்பட்டது. தஞ்சை ஜில்லா கல்வியதிகாரி ஸ்ரீமான் T. கிருஷ்ணமாச்சாரியாரவர்கள் தலைமை வகித்தார். அதுசமயம் தஞ்சை ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் E. V. கோபாலய்யர், சாரண இயக்கக் காரியதரிசி (கௌரவ) ஸ்ரீமான் ப. தியாகராஜ பிள்ளையவர்கள், தஞ்சை சர்க்கார் செக்கண்டரி கிரேடு போதனாமுறை பாடசாலை தலைமை ஆசிரியர் ஸ்ரீமான் S. வெங்கடேசய்யர் முதலியவர்கள் விஜயம்செய்து சொற்பொழிவாற்றினார்கள்.

கடவுள் வாழ்த்து, கல்விபயிலும் மாணவிகளால் பாடப்பெற்ற பின் பெற்றோர் சங்கக் காரியதரிசி ஸ்ரீமான் S. ரெங்கசாமி அய்யங்கார் தலைவரவர்களையும் மற்றும் விஜயம்செய்த பிரமுகர்களையும் வரவேற்றார்.

தலைவர் தன் முன்னுரையில், சர்க்கார் உதவிபெறும் ஆரம்பப் பாடசாலை நிர்வகிப்பதன் கஷ்ட நஷ்டங்களையும், அரசாங்க ஆதாவினால் அவைகள் பயன்பெருது என்றும், பெற்றோர்கள் ஒத்துழைப்பினாலேயே பயன்பெருமென்று தெளிவாக எடுத்துக் கூறினர். மாணவிகளால் பாட்டும் அபிநயமும் என்ற நிகழ்ச்சி நிகழ்ந்தபின்னர், இப்பாடசாலை மானேஜர் ஸ்ரீமான் T. S. வீரராகவாச்சாரியார் ஆண்டு அறிக்கை வாசித்தார். ஸ்ரீமான் ப. தியாகராஜ பிள்ளையவர்கள் சாரண இயக்கத்தின் அமைப்பு, அவசியம், வளர்ச்சி முதலியவற்றைத் தெளிவுபட எடுத்துக் கூறினார். அடுத்த நிகழ்ச்சியாகிய "தாயும்—மகனும்" என்ற நாடகம் நடித்துக் காண்பிக்கப்பட்டது. கடைசியாகத் தலைவர் தன் முடிவுரையில் குழந்தைகளின் நடிப்புத் திறமையைப் போற்றினார். ஆனால் அவ்வளவு உருக்கமான பாகத்தைக் குழந்தைகள் நடிப்பதற்கு அளிக்கக்கூடாது என்றும் கூறினர். அதன்பின்னர் இப்பாடசாலையில் நடந்த நூற்புப்போட்டி முதலியவற்றிற்குப் பரிசுகள் வழங்கப்பெற்றன. முடிவில் இப்பாடசாலை மானேஜர் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது கலைந்தது.

பு. து. இராஜகோபாலன்,
(For) மானேஜர்.

210010

22-3-'46-ல் St. Mary's Ely. School, Othayal, Sathur பெற்றோர் சங்க விழா Rev. Father S. M. Antony சுவாமியார் அவர்களின் தலைமையின்கீழ் கொண்டாடப்பட்டது. ஷை பாடசாலை ஆசிரியர் ஸ்ரீ G. Susaimanickam அவர்கள் "பெற்றோரும் கல்வியும்" என்பதைப்பற்றி சொற்பொழிவாற்றினர்.

28-3-'46-ல் தோகமலை போர்டு ஆண் பாடசாலை, பெ. சங்கம், கனம் டாக்டர் P. K. அச்சன் L. M. P. அவர்களது தலைமையின் கீழ் நடைபெற்றது. அவ்வயம் குளித்தலை ரேஞ்சு டெப். இன்ஸ்பெக்டர் ஸ்ரீ M. D. கோதண்டராம அய்யங்கார், B.A., L.T., அவர்கள் "கட்டாயக் கல்வியும், பெற்றோர் கடமையும்" என்பதைப்பற்றியும், ஆசிரியர் J. மாணிக்கவாசகம் அவர்கள் கல்வியைப்பற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். மாணவர்களின் ஆடல்பாடல், தலைவரின் முடிவுரை இவற்றுடன் விழா இனிது நிறைவேறியது.

R. S. Subramanian, Secretary.

29-3-'46-ல் பெரியகுளம் தாலூகா, துலுக்கப்பட்டி போர்டு முகமதிய பாடசாலை பெற்றோர் சங்க விழா ஸ்ரீ V. S. அருணாசலம் (Sanitary Inspector & I class Vaccinator) அவர்கள் தலைமையில் வெகு விமரிசையுடன் நடைபெற்றது. கல்வியின் அவசியம், பெற்றோர் கடமை முதலிய தலைப்புகள் விவரிக்கப்பட்டன.

A Arulappan, Headmaster.

30-3-'46-ல் சாத்தூர் தாலூகா சங்கரலிங்கபுரம் ஆரம்ப ஆசிரியர்களின் சங்க ஆண்டுவிழா சாத்தூர் ரேஞ்சு கனம் டெப். இன்ஸ்பெக்டர் ஸ்ரீ V. சேதுராமலிங்கம் அவர்களின் தலைமையின்கீழ் சிறப்பாய் நடைபெற்றது. அவ்வமயம் பல அறிஞர்கள் இனிய சொற்பொழிவுகளாற்றினர். மாணவர்கள் ஆடல் பாடல்களால் அனைவரையும் மகிழ்வித்தனர்.

N. Srinivasan, Secretary.

விடுகதைகள்

[கொத்து 36, மலர் 9. பக்கம் 600-ன் விடுகதைகள்]

விடைகள்: 1. விளக்கு. 2. வரகு அரிசி அதாவது ஏழு அரங்கு என்பது வரகு அரிசியின்மேலிருக்கும் ஏழு உமிகள். பட்டு என்பது சணல் (கோணிப்பை.) பன்னீர் என்பது சாணம் கலந்த தண்ணீர். திருநீர் என்பது சாம்பல். 3. சோறு கொதித்து வருதல்; அகப்பை; தட்டு. 4. தேங்காய். 5. சிரிப்பு. 6. சோளம்.

* * * *

ஷை விடையளித்தவர்கள்: 1. K. Krishnan, Krishnapuri. 2. A. Lucas, Michael Palayam. 3. A. Xavier Jeganathan, Sattur. 4. M. Kamala Ammal, Pupil Kila Adanur. 5. M. Thomas Podoga pandian, Sathur.

இருண்ட இதயம்

[கோஹினூர்]

[இருண்ட இருதயத்தில் வெளியாகும் பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே. ஒருவரையும் குறிப்பிடுவன அல்ல!]

(கொத்து 36, மலர் 8, பக்கம் 167-ன் தொடர்ச்சி.)

6. காதலின் சக்தி

"ஸார்! தயவுசெய்து சொல்லுங்கள். ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று கண்ணீருடன் கேட்டேன். இருவரும் சிரிப்பதை நிறுத்திக் கொண்டு, "திடுக்கிடவேண்டாம். 15 வருடமாக இந்த பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இருந்தீர்கள். ஒரு வெள்ளைக்காரர்தான் உங்களை கொண்டுவந்துவிட்டார். நீங்கள் "டேய்! ஜோதிடா! என் ஜோதிடா என்று கத்திக்கொண்டிருந்தீர்களாம்........" என்று பேசிக்கொண்டு போகையிலே இடைமறுத்து, "ஆமாம் ஜோதிதான் இறந்துவிட்டாளே!" என்றேன். அவருடைய முகத்தில் புன்சிரிப்பு இல்லை—வெற்றிச்சிரிப்பு தாண்டவமாடியதுபோலிருந்தது! இருவரும் என் பொருள்களை எல்லாம் கொடுத்தார்கள். 15 வருடத்தில் எல்லாமே மாறிவிட்டதுபோலிருந்தது எனக்கு! ஆம்! நானேதான் மாறிவிட்டேனே! அன்று முழுவதும் யோசித்து ஒரு முடிவிற்கு வந்தேன்!

பிணங்கிற்குப்போய் அங்கேயே இருந்து அங்கேயே மடிவது என்ற சங்கற்பத்துடன் பிணங்கிற்குப் புறப்பட்ட "மேரி" என்ற கப்பலில் ஏறினேன். சிறிது நேரத்தில் கப்பல் புறப்பட்டது. இரண்டு நாளாக ஒன்றும் சாப்பிடவேயில்லை. சாப்பிடவும் பிடிக்கவில்லை. "என்னமோ மாதிரி" இருந்தது. மனமும் கலங்கிக்கொண்டே இருந்தது. நாட்களும் ஓடின!

ஒருநாள் கப்பலின் மேல்தட்டிலிருந்தேன். வெளுத்த வானத்தை உளுத்த இதயத்துடன் பார்த்துக்கொண்டிருந்தேன். வரண்ட கண்களிலிருந்து உணர்ச்சியுள்ள நீரூற்று அருவிபோல் புறப்பட்டது. பொங்கும் மனதுடன் மங்கின ஜோதியின் படத்தை எடுத்துப்பார்த்தேன். ஆழ்ந்த பெருமூச்சுடன் மனம் பழைய கனவு ஏடுகளை ஒருதரம் புரட்டிவிட்டது! "பிணங் கரை தெரிகிறது!" என்று கப்பலிருந்தவர்கள் கத்தினார்கள். கனவு ஏடுகளை நிறுத்திவிட்டு விமோசனமற்ற பாவியான நானும் பார்த்தேன்! ஆம்! பிணங்கிற்கு வந்துவிட்டோம்!!

பிணங்கில் நான்கு நாட்களாக அலைந்து ஒரு ரப்பர் தோட்டத்தில் 100 வெள்ளி சம்பளத்தில் கங்காணியாக அமர்ந்தேன்! உலகத்தையே மறந்துவிட்டு என் வேலையில் கருத்தாக இருக்க எண்ணினேன். ஆனால் இந்த உள்ளம் அந்த ஜோதியைமட்டும் மறக்க மறுத்துவிட்டது! இருண்ட இதயத்துடன் என் வேலையைச் செய்துகொண்டிருந்தேன். எனக்குக்கீழ் 100 ஆண்களும், 50 பெண்களும் வேலை செய்துகொண்டிருந்தார்கள். வாலிபப் பெண்களை நோக்கும்

பொழுது மனம் தடுமாறும். என்ன இருந்தாலும்—முப்பத்தாறு வயதானாலும் ஆண் இதயம்தானே என் இருண்ட இருதயம்! ஆயினும் ஜோதியை நினைக்கையில் எல்லா மாய எண்ணங்களும் மறைந்து என் உள்ளம் எனக்குள்ளேயே சோர்ந்துபோகும். காதலின் சக்திதான் என்னே?

இரு ஆண்டுகளுக்குப்பின் ஒருநாள் தோட்டத்தில் ஆஜர் எடுத்தேன். வஸந்தி என்னும் விதவை பெண்ணைத்தவிர யாவரும் வந்திருந்தனர். "வஸந்தி எங்கே?" என்று கேட்டேன். "அவள் அதிக ஜுரமாய்க் கிடக்கிறாள். அதனால்தான் அவள் மகன் ஹென்றிகூட வரவில்லை" என பதில் கிடைத்தது. யாவரையும் வேலை செய்யச் சொல்லிவிட்டு நான் வஸந்தியின் குடிசையை நோக்கி நடந்தேன்.

பாழடைந்த குடிசைக்குமுன் நின்றுகொண்டு "வஸந்தி!" என்று கூப்பிட்டேன். 18 வயது மதிக்கத்தக்க ஒரு வாலிபன் வந்தான். அவன்தான் ஹென்றி! வஸந்தியின் மகன்!! "ஸார் அம்மா! அதிக வியாதியாகக் கிடக்கிறார்கள். வர முடியவில்லை!!" என்று கதறினான். நான் "பரவாயில்லை. அம்மாவை நான் பார்க்கவேண்டும்" என்றேன். அவனும் என்னை உள்ளே அழைத்துச்சென்றான். வியாதியஸ்தரைக் கண்டாலே எனக்கு பச்சாத்தாபம் ஏற்படும். ஏனெனில் ஒரு வியாதி (அம்மை!) தானே என் வாழ்க்கையையே பாழ்படுத்தியது! சுமார் 36 வயது மதிக்கத்தக்க ஒரு பெண்—ஆமாம் வஸந்திதான்! கட்டிலில் படுத்திருந்தாள். "வஸந்தி!" என்றேன். "ஸார்" என்றாள் ஈனஸ்வரத்தில். மெதுவாகக் கண்ணைத்திறந்தாள். ஒரு பெருமூச்சுவிட்டாள் என் முகத்தைப் பார்த்தவுடன்! சிறிது நேரம் மௌனமாக இருந்தோம். ஹென்றியும் பக்கத்திலிருந்தான். "ஹென்றி! சற்று கடைக்குப்போய் வெற்றிலைப்பாக்கு வாங்கிவா!" என்றாள் வஸந்தா! ஹென்றியும் சென்றுவிட்டான்!

கட்டிலிலிருந்து கஷ்டத்துடன் எழுந்து "அண்ணா!" எனக் கூறிக்கொண்டே என் கால்களில் விழுந்தாள் வஸந்தி! அவளைக் கூர்ந்து கவனித்தேன். விக்கி விக்கி பேச ஆரம்பித்தாள்.

"அண்ணா!......உங்களை அப்படியே அழைக்கப்போகிறேன்...... அண்ணா! இன்னும் சிறிது நேரம்தான் எனக்கு இந்த உலகம்......... அதற்குள்ளாக என்னிருண்ட இதயத்தில்.........புதைந்து கிடக்கும் ....அந்தரங்க விஷயத்தை......உங்களிடம்...மகமதியனான உங்களிடம்.........உங்களிடம்..............(அடடா! சொல்லவே மறந்துவிட்டேனே! பினாங்கில் இறங்கியவுடன் கைலியைக்கட்டிக்கொண்டு 'முஸ்தாப்' என்ற பெயருடன் மகமதியனாகவே இறங்கினேன்!) சொல்லப்போகிறேன்...ஹா;......நெஞ்சை...வலிக்கிறதே! ...."

"சகோதரி வஸந்தா! மெதுவாகச்சொல். இனி நீ என் சகோதரிதான்! பயப்படாதே!"

"அண்ணா! பயம் என்ன? என் வாழ்க்கையே இருட்டுதான்! உளுத்த இதயத்துடன் உலகைக்கடந்துவிட்டேன். ஹென்றியைப் பாதுகாக்கவேண்டியது உங்கள் பொறுப்பு."

"சரி வஸந்தா! நீ யார்? உன் வாழ்க்கையின் மர்மம் என்ன? என் முகத்தைப்பார்த்து ஏன் பெருமூச்சுவிடுகிறாய்?"

"அண்ணா! என் இருண்ட வாழ்க்கையை நீங்கள் அறியவேண்டுமா?......உம்......சாகப்போகும் நான் என் அந்தரங்க விஷயங்களையும் என்னுடன் மடித்தால் என்ன பயன் ஏற்படப்போகிறது?......... விட்டுவிட்டால்தான் என்ன பயன்?......அண்ணா! சொல்லுகிறேன் கேட்கிறீர்களா?"

"சரி! நிதானமாக, பதறாமல் சொல்லு."

ஆழ்ந்த பெருமூச்சுடன் தன் கதையைக் கூறத்துடங்கினாள். "என்......சொந்த ஊர்......இந்தியாவில......ஆமாம்......மேட்டூர்" "ஹா!......மேட்டூர்...மேட்டூர்......எந்த மேட்டூர்?" "ஏன் பதட்டம்?......திருச்சினாப்பள்ளியிலுள்ள மேட்டூர்." என் தாய்—தந்தையர் என்னை செல்வமாக வளர்த்தார்கள். அத்தியந்த பிரீதியுடன்தான் என்னைப் போஷித்தார்கள்.........அந்த சமயம்...அண்ணா கேட்கிறீர்களா?......என் இளமை பொங்கும் நாட்களில்......ஒரு யௌவன வாலிபன்—கள்ளன் என் ஹ்ருதயத்தை திருடிக்கொண்டுபோய்விட்டான்......அந்த வாலிபனை நினைத்து நினைத்து உருகினேன்........... பொறுமையான குணம்......அழகில் மன்மதன்தான்......அந்த எழில் ரூபனோ வேறொருவளை காதலித்தான்......என் ஹ்ருதயத்தில்......"

"வஸந்தா! ஆயாஸப்படாமல் சொல்லு."

"ஆயாஸம் என்ன அண்ணா! என் விதி அப்படி என்றால் நான் என்ன செய்வது? என் ஆருயிர் காதலனது இதயத்தில் வேறொருவள் வந்தபின் எனக்கேது இடம்? அப்படியிருந்தும் விதியின் விளையாட்டால் என் காதலன் தான் விரும்பிய பெண்ணை மணக்கமுடியாமல் போய்விட்டது." (ஆழ்ந்த பெருமூச்சு.)

"நல்லதுதானே! உன்னை மணந்துகொண்டாரல்லவா?"

(பெருமூச்சுடன்) இம்......அந்த பாக்கியம்......இந்த துர்பாக்கியசாலிக்கு......கிட்டுமா?

"ஏன்? உன் காதலர்."

"காதலரா?......ஆம்! இன்பகாதலர்தான்!! என்னை கொள்ளை கொண்ட கணவர்தான்!......தன் இதயராணியை மணக்கமுடியவில்லை என்று......பினாங்கிற்கே வந்துவிட்டார்."

"ஹா! என்ன?......உன் பெயர்?"

"வஸந்தா......ஆமாம்!......பினாங்கிற்கு வஸந்தா......மேட்டூருக்கு காந்தா!........."

"ஹா! காந்தா!!......காந்தா......" என்று மனதுக்குள் கூறிக்கொண்டேன். அவள் என்மீது காதல்கொண்டுதான் இங்கே வந்

திருக்கிருள் என்பதைக்கண்டுகொண்டேன், இன்னும் அதை நிவர்த்தி செய்யக்கேட்டேன்.

"உன் காதலன் பெயர் என்ன?"

"ஸாம்"

"அவனுடைய காதலி யார்?"

"ஜோதி"

"அவளுக்கு மணமாகிவிட்டதா?"

"ஆமாம்! யோசேப்பு என்ற பணக்காரனை மணந்துகொண்டாள்."

"நீ பினங்கிற்கு ஏன் வந்தாய்?"

"என்னுயிர் காதலனைத்தேடி அவரையே மணந்துகொள்ள நினைத்தேன்......அதனால் துணிவுடன் இங்கே வந்து 15 வருடமாக தேடினேன்...... (பெருமூச்சுடன்) அந்தரூபனைக் காணவில்லை—பாக்கியம் கிடைக்கவில்லை!"

"அவனுக்குத்தாண் உன்மேல் பிரியமில்லை என்கிருயே அப்படியிருந்தும் நீ ஏன் அவனையே தேடுகிருய்?"

"உண்மை காதலுடைய இதயத்திற்குத்தான் அந்த விஷயம் விளங்கும்...........அண்ணு! தயவுசெய்து ஹென்றியை காப்பாற்றுங்கள்."

"ஸகோதரி! உன்னை என் சொந்த ஸகோதரியாக நினைத்தேன்—நினைக்கிறேன். பயப்படாதே! பிழைத்துக்கொள்வாய்."

"பிழைத்துக்கொள்ள விரும்பவில்லையே அண்ணு!"

"ஏன்?"

"பிழைப்பதால் யாருக்குப் பயன்?"

"அது சரி! இறப்பதால்தான் யாருக்குப் பயன் வரப்போகிறது? ஹென்றி உன் மகனு?"

"அண்ணு! இது என்ன கேள்வி! காதலனின்றி மகன் ஏது? மகள் ஏது? இன்ப காதலனைத் துறந்து பின் வேருெரு யுவனை—என் மன்மதன் என்னும் மதியீனனையேகூட நினைக்கலாமா? அண்ணு!... என்மீது அவ்வளவுகூடவா நம்பிக்கை இல்லை?...என்னை... அவ்வளவுக்குக்கூடவா மதிக்கவில்லை......?"

"வஸந்தா!......மன்னித்துக்கொள்......மகன் என்றதால் கேட்டேன்......தயவுசெய்து மன்னித்துக்கொள்."

"மன்னிப்பு என்ன அண்ணு? ஹென்றி யார்? இதுதானே உங்கள் சந்தேகம்......இதோ இந்தக் கடிதம் பதில் சொல்லும்" என்று கூறி முத்திரையிடப்பட்ட ஒரு கடிதத்தைக் கொடுத்தாள். அதைப் பிரித்து வாசித்துத் திடுக்கிட்டேன்! (தொடரும்.)

"அம்மா"

[T. Antony]

பூங்குளம் என்ற ஊரில் ஜானகி என்ற ஒரு பெண் இருந்தாள். அவளுக்கு அப்பாவும் இல்லை; அம்மாவும் இல்லை தாத்தா மட்டுந்தான் இருந்தார். ஜானகியின் வீட்டில் ஒரு பச்சைக் கிளி வளர்ந்து வந்தது. அது ஜானகியைப் போலவே மிகவும் அழகாக இருந்தது. அவளைப் போலவே இனிய குரலும், நல்ல குணங்களும், கூர்மையான அறிவுங்கூட அதற்கு அமைந்து விட்டன. ஒரு நிமிஷம் அவளைக் காணாவிடில் அது, "ஜானகி! ஜானகி!" என்று அலறித் துடிக்கும்.

அப்பா அம்மா அற்ற ஜானகிக்கு அந்தப் பச்சைக்கிளிதான் ஆறுதலாக இருந்தது. அதை ஜானகி கூட்டில் அடைப்பதே இல்லை. அவளுடைய இடது கையின் மேல் அழகாக உட்கார்ந்து கொண்டு அவள் கொடுக்கும் பழங்களையும் பாலையும் விருப்பத்தோடு சாப்பிடும். ஜானகி வீணை வாசிக்கும்போது அது அவள் எதிரே உட்கார்ந்து கொள்ளும். எப்போதும் பச்சைக்கிளியோடு விளையாடிக் கொண்டிருப்பாள். அதனாலே ஜானகிக்கு நேரம் போவதே தெரியாது. பச்சைக்கிளியைப் போலவே அவளும் உல்லாசமாக ஆடிப் பாடிக்கொண்டிருந்தாள்.

ஜானகிக்கு பதினைந்து வயதாயிற்று தகுந்த புருஷனைப் பார்த்து அவளைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கவேண்டுமே என்று அவளுடைய தாத்தாவுக்குக் கவலை ஏற்பட்டது. அவர் அதைப் பற்றி ஜானகியிடம் இரண்டு மூன்று தடவை சொல்லி இருந்தார். தாத்தா தள்ளாத வயசில் இம்மாதிரி கஷ்டப்படவேண்டியிருக்கிறதே என்று அவளும் கஷ்டப்பட்டாள்.

எப்பொழுதும் அன்று மலர்ந்த ரோஜாப் பூவைப்போல ஜானகியின் முகம் இருக்கும். அது சில நாட்களாக வாடிய ரோஜாப் பூ மாதிரி அழகு மங்கிப்போய் இருந்தது. அதைக்கண்ட பச்சைக் கிளிக்கு உற்சாகம் குறைந்து விட்டது. பேசாமல் கூட்டிற்குள்ளேயே போய் உட்கார்ந்துகொள்ள ஆரம்பித்தது. இப்படி உற்சாக மில்லாமலிருக்க அதற்குப் பிடிக்கவில்லை. ஆகையால் ஒரு நாள் அது வெளியேபறந்தோடி விட்டது.

வீட்டை விட்டு வெளியே வந்து பச்சைக் கிளி வானவெளியெல்லாம் ஒரு தடவை சுற்றியது. பின்பு பழமரங்கள் அடர்ந்திருந்த ஒரு சோலைக்குள்ளே போய்ப் பழங்களைக் கொத்தித் தின்றது. அப்படி இருந்தும் அதற்கு உற்சாகம் உண்டாகவில்லை. சோலையிலிருந்த பழங்கள் ஜானகி தன் கையினாலே கொடுக்கும் பழங்களைப் போல அவ்வளவு இனிமையாக இல்லை. திரும்பவும் ஜானகியிடம் போய் விடலாமா என்று கூட அது எண்ணியது. அவள் தன்னைக் காணமல் தவித்துக் கொண்டிருப்பாள் என்று அதற்கு நன்றாகத் தெரியும். அங்கே போனால் ஜானகியின் கவலைதோய்ந்த முகத்தைப்

பார்க்க வேண்டியிருக்குமே என்று அது வருந்தியது. என்ன செய்வதென்று தெரியாமல் அங்கும் இங்கும் பறந்து திரிந்து கொண்டிருந்தது.

மறுநாட்காலை அது பூங்குளம் ஜமீன்தார் வீட்டு முற்றத்தில் போய் உட்கார்ந்தது. ஜமீன்தாரின் மகன் பெயர் சுகுமாரன். அவன் அப்பொழுது முற்றத்தில் நின்று கொண்டிருந்தான். அவன் பிராணிகளிடம் மிகவும் அன்பாக இருப்பான். பச்சைக்கிளி அங்கே வந்து உட்கார்ந்தவுடன் மிகவும் பிரியத்தோடு, "வா, வா" என்று அதைக் கூப்பிட்டான். சுகுமாரன், ஜானகியைப்போலவே அழகாகவும் அன்பாகவும் இருந்ததால் பச்சைக்கிளி பறந்துபோய் அவன் தோளில் உட்கார்ந்துகொண்டு, "ஜானகி! ஜானகி!" என்று அழகாகச் சொல்லிற்று.

எங்கிருந்தோ வந்த ஒரு கிளி சுகுமாரனிடம் வெகுநாள் பழகியதுபோல அவன் தோளில் வந்து உட்கார்ந்து பேசுவதைக் கண்டு அங்கிருந்தவர்கள் எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். அது அடிக்கடி, "ஜானகி! ஜானகி!" என்று சொன்னதால், ஜானகி என்ற பெண் அதை வளர்த்திருக்கவேண்டும் என்று சுகுமாரன் ஊகித்துக்கொண்டான். ஆனால் அந்த பெண் யாரென்று அவனால் அறிய முடியவில்லை.

சுகுமாரன் அதற்குப் பாலும் பழமும் கொடுத்து அன்பாக உபசரித்தான். பின்பு அதற்கு, "சுகுமாரன்! சுகுமாரன்!" என்று தன் பெயரைச் சொல்லப் பழக்கினான். "சுகுமாரன்" என்று சொல்வதற்குக் கற்றுக்கொண்ட பச்சைக்கிளி, "ஜானகி, சுகுமாரன்! ஜானகி, சுகுமாரன்" என்று வாய் ஓயாமல் சொல்ல ஆரம்பித்தது. இவ்வாறு சொல்லிக்கொண்டே பத்து நாள் வரையில் அது சுகுமாரனோடு விளையாடிக்கொண்டு அங்கேயே இருந்தது. சுகுமாரன் அதனுடைய கூர்மையான புத்தியைக் கண்டு அடிக்கடி வியந்தான்.

பதினோராவது நாள் பச்சைக்கிளி அங்கிருந்து ஜானகியின் வீட்டிற்கு ஓடிவந்துவிட்டது. கிளியைக் காணாமல் நன்றாகச் சாப்பிடாமல் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள் ஜானகி. இச்சமயத்தில் திடீரென்று பச்சைக்கிளி அவள் கையில் போய் உட்கார்ந்து கொண்டு, "ஜானகி, சுகுமாரன்! ஜானகி, சுகுமாரன்!" என்று பலதடவை கத்தியது. ஜானகி தன் பச்சைக்கிளியைத் திரும்பக் கண்டதும், ஆனந்தக் கண்ணீர், கதிரவனைக்கண்ட பனிபோல உருகி பெரும் ஆறாக ஓடியது. கிளியை அப்படியே தன் தோளோடு சேர்த்துக் கட்டிக்கொண்டாள். பின்பு அதன் உடம்பெல்லாம் மிருதுவாகத் தடவிக் கொடுத்து, தேனினும் இனிய பழங்களையெல்லாம் அதற்கு ஊட்டினாள். இது இடைவிடாமல், "ஜானகி சுகுமாரன்! ஜானகி சுகுமாரன்!" என்று சொல்வதன் காரணம் அவளுக்குப்புரியவே இல்லை. 'பச்சைக்கிளியே சுகுமாரன் என்றவர் யார்?'

என்று அவள் அதனிடம் கேட்டாள். அந்தக் கேள்விக்கு எப்படி பதில் சொல்வதென்று பச்சைக்கிளிக்குத் தெரியவில்லை. தன் சிறகை அடித்துக்கொண்டு இரண்டு மூன்று தடவை வீட்டிற்கு வெளியே போய்விட்டுத் திரும்பி வந்துவிட்டது. பச்சைக்கிளி தன்னை எங்கேயோ அழைக்கிறதென்று ஜானகிக்குத் தெரிந்து விட்டது. தாத்தாவிடம் சொல்லிவிட்டு, பச்சைக்கிளியின் விருப்பப்படியே அவள் அதன் பின்னால் சென்றாள். அது மெதுவாகப் பறந்து பறந்து முன்னே செல்ல, ஜானகி அதைப் பின்பற்றி நடந்தாள்.

இம்மாதிரியாக நாலைந்து தெருக்கள் நடந்ததும், பச்சைக்கிளி அங்கிருந்த பூங்குளம் ஜமீன்தாரின் பங்களாவிற்குள் ஜானகியை அழைத்துச் சென்றது. அங்கே சுகுமாரனைக் கண்டதும் அது தாவிப்போய் அவன் மீது உட்கார்ந்தது. பச்சைக்கிளி திரும்ப வந்து விட்டதைக் கண்டு சுகுமாரன் ஆனந்தமடைந்தான். அது அழைத்து வந்திருந்த ஜானகியை அவன் பார்த்ததும், அவள் வெட்கத்தினால் தலையைக் குனிந்து கொண்டாள். எனினும் அவளை அறியாமலே அவள் முகம் அன்றலர்ந்த புஷ்பம்போல மலர, நறுமணம் கமழும் நந்தவனப் புஷ்பங்கள் மெல்லிய காற்றினால் அசைந்தாடி காக்ஷி அளிப்பதுபோன்று அவளது நெடுங்கூந்தல் காக்ஷியளிக்க அவள் தான் ஜானகியாக இருக்கவேண்டும் என்று சுகுமாரன் தெரிந்து கொண்டான். பச்சைக்கிளியையும் சிவப்புக்கிளி போன்ற ஜானகியையும் மாறிமாறிப் பார்த்து அவன் அதிசயப்பட்டுக் கொண்டிருந்தான். பச்சைக்கிளியோ இருவர்மீதும் மாறிமாறி உட்கார்ந்து கொண்டு, "ஜானகி சுகுமாரன்! ஜானகி சுகுமாரன்!" என்று ஆனந்தக் கூத்தாடியது.

இதற்குள் சுகுமாரனுடைய அம்மா அப்பா எல்லோரும் அங்கே வந்து இந்த வேடிக்கையைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். சுகுமாரனுடைய தாய் ஜானகியை வீட்டிற்குள் அழைத்துக்கொண்டு போய் மிகவும் அன்போடு உபசரித்தாள். பின்பு அவள் ஜானகியின் வரலாறு முழுவதையும் விசாரித்து அறிந்துக்கொண்டாள்.

சிறிது நேரம் கழித்து ஜானகி தன் வீட்டிற்குப் புறப்பட்டாள். ஆனால் பச்சைக்கிளி அவளை அங்கிருந்து போகவிடாமல் 'கீ, கிக்கீ!' என்று கத்தித் தடுத்தது. ஜானகிக்கு தன் பச்சைக் கிளியை விட்டுப் பிரிய மனம் வரவில்லை. சுகுமாரனுக்கும் அதை விட்டுப் பிரிய மனம் இல்லை. பச்சைக்கிளியோ இருவரையும் விட்டுப் பிரியமுடியாமல் இருவர் மீதும் மாறிமாறித் தாவி உட்கார்ந்தது.

கிளியின் விருப்பை உணர்ந்த சுகுமாரனின் தாய் அதனிடம் போய் "பச்சைக் கிளியே! ஜானகி, சுகுமாரன், நீ ஆகிய மூவரும் எப்போதும் ஒன்று சேர்ந்து வாழ்வதற்கு நான் கூடிய சீக்கிரம் ஏற்பாடு செய்கிறேன்; கவலைப்படாதே" என்றாள். இதைக் கேட்ட

210010

தும் ஜானகிக்கு குபீரென்று வெட்கம் வந்துவிட்டது. பின்பு அவள் பச்சைக் கிளியைப் பார்த்து, "பச்சைக்கிளியே, நீ கொஞ்ச நாள் இங்கேயே இரு. அப்புறம்......நானும்......" என்று சொல்லி முடிப்பதற்குள் அவளுக்குச் சிரிப்பு வந்து விட்டது. பச்சைக் கிளியை சமாதானப்படுத்தி அதை அங்கேயே விட்டு விட்டுத் தன் வீட்டிற்குப் போய் விட்டாள்.

வீட்டிற்குப் போனதும் நடந்த விஷயங்களை எல்லாம் ஜானகி தன் தாத்தாவிடம் விவரமாகச் சொன்னாள். தாத்தா உடனே தம் பொக்கை வாயைத் திறந்து சிரி சிரியென்று சிரித்தார். அவருக்குத் தாங்க முடியாத சந்தோஷம் உண்டாகிவிட்டது. அடுத்த வாரத்திலேயே சுகுமாரனுக்கும் ஜானகிக்கும் மிக்வும் சிறப்பாகக் கல்யாணம் நடந்தேறியது. கல்யாணத்தன்று ஜானகியின் தாத்தா பச்சைக் கிளியின் கழுத்துக்கேற்ற ஒரு ரத்தினமாலை வாங்கிப்போட்டார். அன்று முதல் பச்சைக்கிளி எப்போதும், "ஜானகி சுகுமாரன்! ஜானகி சுகுமாரன்!" என்று இன்பமாகக் கூறிக்கொண்டே இருவரோடும் சுகமாக வாழ்ந்து வந்தது.

ஜானகியின் கல்யாணத்திற்குப் பிறகு இரண்டு மாதங்களுக்கெல்லாம் அவளுடைய தாத்தா இறந்தார். கல்யாணமான ஒரு வருஷத்திற்கெல்லாம் சிந்தாதேவி பிறந்து விட்டாள். காதற் புனத்திலே விளைந்த பயிரல்லவா? கடைந்தெடுத்த தங்கப் பதுமை போலிருந்தாள். சிந்தா பிறக்கும்பொழுதே குழந்தையைப் பார்க்கும் போது இருவர் உள்ளத்திலும் புதியதோர் ஆனந்தவெள்ளம் கரை புரண்டோடியது. புதிய வெள்ளம் பழைய வெள்ளத்தை அடித்துத் தள்ளிவிட்டது. குழந்தை பிறந்த ஆறும் மாதத்துக்குள்ளே, கட்டிய அந்த காதற்கோட்டையை இடித்து நொறுக்கி விட்டு அந்த பசும் பாலகியைத் தாயில்லாக் குழந்தையாக்கி எவரும் எட்ட முடியாத பிரதேசத்திற்கு பிரயாணப்பட்டு விட்டாள் ஜானகி.

கரைகாணாத இன்ப வெள்ளத்தில் மிதந்துகொண்டிருந்த சுகுமாரன் திடீரென்று கட்டாந்தரையில் போய் விழுந்தான். ஒன்றும் புரியவில்லை. சற்று தெளிந்ததும் தம் வீட்டிற்கெதிரே, இடி விழுந்து, தலை சிதறி வெறும் விறகாய் நிற்கும் புளிய மரத்துக்கும் தமக்கும் வித்தியாசமொன்றுமில்லை என தீர்மானித்துவிட்டான். ஆனால் உண்மையில் அவன் வாழ்வு அப்படியொன்றும் காய்ந்த விறகாய்ப் போய்விடவில்லை. ஆணிவேர் அற்றுப்போயினும் பக்க வேர் பலமாயிருந்தது.

குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக பிறைச் சந்திரனைப்போல் வளர்ந்தது. வயது ஐந்தாயிற்று. கொச்சையாகச் சிறிதளவு பேசவும் பிறர் சொல்வதை ஓரளவு புரிந்து கொள்ளவும் தெரியும். தன்னைப்போன்ற சிறுவர்களாகிய கோமதி, சரஸி, கிட்டு இவர்களுடன் விளையாடுவதில் பிரீதி. விளையாட்டு

முடிந்தவுடன் கோமதி, சரஸீ, கிட்டு இவர்கள் ஓடி தங்கள் தாய்மார் களைக் கட்டிப்பிடிக்கப் பலதடவைகளில் சிந்தா பார்த்திருக்கிறாள். யோசனை செய்தாள். தகப்பனாரைக் கேட்கத் தீர்மானித்துக்கொண் டாள். உடனே வீடு திரும்பி,

"அப்பா! நான் ஒன்று கேக்கட்டுமா? கேட்டா திட்டுவாயா?" என்றாள்.

"இல்லேடா கண்ணு. நான் ஏன் உன்னைத் திட்டப்போகிறேன். கேளேன்."

"நம்ப அம்மா எங்கே, சொல்லமாட்டாயா?"

"பாட்டிதான் நம்ப அம்மா."

"இல்லே, பொய் சொல்லறே. பாட்டி உனக்கு மட்டுந்தான் அம்மா. நீதானே அம்மான்னு கூப்பிடறே பாட்டியே. நான் பாட்டின்னுதானே சொல்றேன்."

"நீ என்னம்மா கேட்கிறே, எனக்கு ஒன்றும் புரியவில்லையே?"

"இல்லேப்பா, எனக்கு அம்மா இல்லையான்னு கேக்கிறேன்."

"இல்லே."

"மெய்யா இல்லவே இல்லையா?

"ஆம் இல்லவே இல்லே."

"பின்னே கோமதி, சரஸீ, கிட்டு எல்லாருக்கும் அம்மா இருக் காங்களே, எனக்கு மட்டும் ஏம்ப்பா இல்லே?"

(தொடரும்.)

திருச்சினாப்பள்ளி

அர்ச். ஆஞ்சேலம்மாள் போதனாமுறைப் பாடசாலை பொன்விழா

திருச்சி, அர்ச். வியாகுலமாதா சபைக் கன்னியர்களால் நடத்தப்பட்டுவரும் அர்ச். ஆஞ்செலம்மாள் போதனாமுறைப் பாடசாலையின் **ஐம்பதாவது ஆண்டு விழா** இவ்வருஷம் டிசம்பர் மாதத்தில் கொண்டாடப்படும். பழைய மாணவிகள் தங்கள் நன்றியறிதலைக் காட்ட முன்வருவார்களாக. கண்ணியம்வாய்ந்த கத்தோலிக்கரும், பரோபகார சிந்தையுடைய பெரியார்களும் தாராளகுணமுடைய தனவான்களும் தங்களாலான பொருளுதவி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

செலீன் மேரி,
அதிசிரேஷ்ட தாயார்,
அர்ச். வியாகுலமாதா மடம், திருச்சினாப்பள்ளி.

Reg. No. M. 1534.

சங்கீதம்

(By B. Thomas Victor, Music Teacher.)

28 மே. க. இராகம் : ஹரிகாம்போதி ஆதிதாளம்.

ஆ—ஸரிகமபதநிஸ்
அ—ஸ்நிதபமகரிஸ

ஸா ட ம மா கம	பா ப ம	த ப கா
புத் திய ளித் தாய்	பூ மா	போ ற்றி
க ம ப ப ப த நி ஸ்	த நி பா	ம க மா
பொருந் திய கண் கள்	தந் தாய்	போற் றி.

2. காதுகள் தந்தாய் கருணை போற்றி
கந்தமுக நாசி தந்தாய் போற்றி.

3. வாயோடு நாவை தந்தாய் போற்றி
வணங்கும் கைகள் தந்தாய் போற்றி.

4. நடமிடும் கால்கள் தந்தாய் போற்றி
நரனை உமக்காய்ப் படைத்தாய் போற்றி.

குறிப்பு :—முதல் வகுப்புக்குரியது. கிரிகையோடு கற்பிக்க வேண்டும். இதில் போற்றி என்ற பதம் கடவுளைக் குறிக்கும்.

WANTED 4 Secondary Grade Female Teachers. Salary Rs. 30/- plus Dearness Allowance per mensem.

Apply to the Headmistress,
St. Michael's Training School, Palni.

WANTED one Secondary Grade Trained Teacher for R.C. Boys' School, Anandarayankottai, Dindigul P. O. Salary Rs. 25/- plus Government Dearness Allowance.

Apply to the Manager.

தேவை :—கோட்டம்பாளையம் பங்கு பாடசாலைகளுக்கு மூன்று ஹையர் கிரேடு ஆசிரியர்கள் தேவை. விபரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

Rev. Fr. M. Regis Parish Priest,
Kottampalayam Pudur,
Kurumandur, P. O., (*Via*) Erode and Gobi.

Editor and Publisher : Rev. Fr. A. Lourduswami, B. A., L. T.
Headmaster, R. C. Secondary Training and High School.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Supt., St. Joseph's Industrial School Press, Trichinopoly.
Q. H. No. Ty.—1, 14—3—1946.